## எல்பிடிய பிரதேச சபை

## காலி மாவட்டம்

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 09 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 28 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 11 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

--------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு எல்பிடிய பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசோட்டமும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யப்பட்ட 06 பாலங்களின் நிர்மாண வேலைகளுக்காக ரூபா 1,611,500 தொகை கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் நிதிக் கூற்றுக்களில் செலுத்த வேண்டியவை கடன்கொடுத்தோரின் கீழ் காட்டப்பட்டிருந்தமையால் நிதிக் கூற்றுக்களில் கடன்கொடுத்தோர் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 08 கிராமிய பாலங்கள் நிர்மாணிப்பதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 2,511,500 இற்கான தொகையொன்று கிடைத்திருந்த போதிலும் கிடைக்க வேண்டியவை என நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 2,511,500 இனால் கடன்பட்டோர் மிகையாகக் காட்டப்பட்டுள்ளது.

(இ) ரூபா 170,378 இற்கான மின்சார உபகரணங்கள் இருப்பு நிதிக் கூற்றுக்களில் மின்சார களஞ்சியம் என குறிப்பிடப்படாமல் பொது களஞ்சிய மீதியுடன் கூட்டப்பட்டுள்ளது.

(ஈ) ஏனைய உதவிப் பெறுவனவுகள் மீளாய்வாண்டின் போது ரூபா 64,972 தொகை என பேரேட்டில் காணப்பட்ட போதிலும் வருமானச் செலவுக் கணக்கில் ரூபா 632,720 என காட்டப்பட்டிருந்தது.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---------------------------------------------------------------------------------------

04 கணக்கு விடயங்கள் தொடர்பாக கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகள் மற்றும் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் மீதிகளிடையே ரூபா 797,285 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 78,884,880 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக காணி உறுதிகள் நாளது வரை பேணப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு, கணிப்பீட்டுச் சபை அறிக்கைகள், காலப்பகுப்பாய்வு மற்றும் சமப்படுத்தப்பட்ட வைப்புப் பதிவேடுகள் போன்ற சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

-----------------------

2.1 நிதி விளைவு

-----------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 8,257,216 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,006,487 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

--------------------------------

2.2.1 வீத வரி

-------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 7,302,719 இற்கான வீத வரி 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 158(1)(அ) இன் பிரகாரம் அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.2 ஏக்கர் வரி

---------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 346,569 இற்கான ஏக்கர் வரி 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 158(1)(அ) இன் பிரகாரம் அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.3 வாடகை

---------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 407,846 இற்கான வாடகை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 159(1) இன் பிரகாரம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.4 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக கட்டணம்

------------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 743,917 உம் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 2,816,545 உம் கிடைக்க வேண்டியிருந்தது.

2.2.5 ஜே.சீ.பீ. இயந்திர வாடகை

--------------------------------------------

சபைக்குச் சொந்தமான ஜே.சீ.பீ. இயந்திரம் மந்திரமார் மற்றும் அதிகாரப் பிரதேசத்தில் நபர்களினால் வாடகைக்கு பெற்றமையினால் ரூபா 86,720 இற்கான வாடகை சபைக்கு கிடைக்க வேண்டியிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------------

3.1 அதிகாரம் இன்றிய கொடுக்கல் வாங்கல்கள்

----------------------------------------------------------------------------

வெளிநாட்டு கல்விச் சுற்றுலா

-------------------------------------------------

பிரதேச சபை நிதியத்தினை பயன்படுத்துவது பற்றிய சட்ட ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ள 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 132 இல் காட்டப்பட்டுள்ள விடயங்களின் கீழ் காணப்படாத கருமம் ஒன்றான 04 வெளிநாட்டு கல்விச் சுற்றுலாக்களுக்காக ரூபா 777,500 தொகையொன்று சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டுள்ளது. அதே போல் வெளிநாடு செல்வதற்காக முறையான அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை.

3.2 முகாமைத்துவத் திறமையின்மை

----------------------------------------------------------

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று சமர்ப்பிக்காமை

--------------------------------------------------------------------------------------------------

1988 இன் 74 ஆம் இலக்க (திருத்திய) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1975 இன் 01 இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் சட்டத்தின் தேவையின் பிரகாரம் 2013 ஆண்டிற்கான சபையின் தலைவர், உப தலைவர் மற்றும் 04 அங்கத்தவர்களினால் சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்று வழங்கியிருக்கவில்லை. அத்துடன் 2014 ஆண்டிற்காக தலைவர், உப தலைவர் மற்றும் அனைத்து மந்திரிமாரினால் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று சமர்ப்பித்திருக்கவில்லை என 2015 மார்ச் 04 திகதி மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

3.3 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

-------------------------------------------------------

2013 ஜுன் 05 திகதிய இலக்கம் : PCMD/PR/2013 கொண்ட ஜனாதிபதி செயலாளரின் சுற்று நிருபத்தின் பிரகாரம் அரச நிறுவனங்களில் பயன்படுத்தப்படாத அழிவடையும் நிலையில் காணப்படும் பழைய வாகனங்கள் மற்றும் பொறியும் பொறித் தொகுதியும் 3 மாதங்களில் அகற்றுவதற்கான செயற்பாடு ஒன்றினை தயாரிக்கும் படி அறிவித்திருந்த போதிலும் கொள்வனவுப் பெறுமதி/ சாட்டுதல் பெறுமதி ரூபா 645,000 இற்கான 02 டிரக்டர்கள், ரூபா 18,000 இற்கான நீர் பவுசர் வண்டி மற்றும் பெறுமதி கணிக்கப்படாத 02 வாகனங்கள் என்பன சபை வளவில் துருப்பிடித்த நிலையில் காணப்பட்டது என 2015 ஜனவரி 24 திகதி மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

3.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

----------------------------------------------

உள்ளூராட்சி மாகாண சபை அமைச்சில் இருந்து 2014 நவம்பர் 24 ஆந் திகதி 1" கல்வணய்ஸ் குழாய்கள் 576 சபைக்கு கிடைத்திருந்தது. இந்த குழாய்களில் 232 பெந்தோட்ட பிரதேச சபைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுத் திகதிக்குப் பின் 190 குழாய்கள் திருப்பி கிடைத்திருந்தன. அதே போல் 2015 ஏப்ரல் 01 திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது சபையில் 225 குழாய்கள் காணப்பட்டன என அவதானிக்கப்பட்டது. இதன் பிரகாரம் 161 குழாய்கள் பற்றாக்குறையாக காணப்பட்டது. பற்றாக்குறையின் பெறுமதி ரூபா 178,227 ஆகும்.

4. கணக்களிப் பொறுப்பும் நள்ளாளுமையும்

--------------------------------------------------------------------

பாதீட்டுக் கட்டுப்பாடு

-------------------------------------

பாதீட்டில் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானத்திடையே முரண்கள் காணப்பட்டதுடன் சில செலவு விடயங்கள் சேமிப்பு காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்